பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 10 2023 7 15

சனிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. இந்திய – ஐக்கிய அரபு இடையே வர்த்தகம் உட்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

2. இயற்கை சீற்றத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சிக்கிம் மாநிலத்தில் சேதங்களை மதிப்பீடு செய்ய மத்திய குழு விரைவில் அம்மாநிலத்திற்கு செல்ல உள்ளது.

3. மகாராஷ்ட்ராவில் இரண்டு அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் உயிரிழந்தது தொடர்பாக விளக்கம்கோரி தேசிய மனித உரிமைகள் ஆணையம், மாநில அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

4. யுக்ரைனில் ரஷ்யா மேற்கொண்டுள்ள சிறப்பு ராணுவ நடவடிக்கையை நிறுத்த முயற்சிப்பதாக அந்நாட்டின் அதிபர் திரு. விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவுக்கு இன்று மேலும் ஒரு தங்கப்பதக்கம் கிடைத்தது. வில்வித்தையில் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஜோதி சுரேகா தங்கம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் -

- **<<<<>>>>**

இந்திய – ஐக்கிய அரபு இடையே வர்த்தகம் உட்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

அபுதாபியில் நேற்று அந்நாட்டு வர்த்தக அமைப்பு ஏற்பாடு செய்திருந்த முன்னணி நிறுவனங்களின் தலைவர்கள் உடனான சந்திப்பு நிகழ்ச்சியின்போது இதனைத் தெரிவித்த அவர், பல்வேறு துறைகளில் விரிவான வளர்ச்சிக்கான பாதைகளை இருநாடுகளும் கண்டறிந்துள்ளதாக அவர் கூறினார்.

உணவு, பாதுகாப்பு, கல்வி, எரிசக்தி பாதுகாப்பு, பருவநிலை மாற்றம், விண்வெளி தொழில்நுட்பம் உட்பட பல்வேறு துறைகளில் இந்தியாவும் - ஐக்கிய அரபு எமிரேட்சும் கூட்டாக செயல்பட திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

பரஸ்பரம் இருநாடுகளின் கலாச்சாரத்தை பிரபலப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இருநாடுகளுக்கிடையே உறவுகளை மேம்படுத்துவதில் ஐக்கிய அரபு

எமிரேட் - இந்தியா வர்த்தக கவுன்சில் மற்றும் பாரத் பஸார் முக்கினை ஆற்றும் என்றும் திரு. பியூஷ்

<<<<>>>>

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தில் நடைபெற்ற இரண்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

நாடு முழுவதும் 80 கோடி ஏழை மக்களுக்கு இலவச உணவு தானியங்கள் வழங்கப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், ஏழை மக்கள், ஐந்து லட்சம் ரூபாய் வரை இலவச மருத்துவ கிசிச்சை பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

பிரதமரின் வீட்டுவசதித்திட்டத்தின்மூலம் எண்ணற்றோர் பயனடைந்திருப்பதாகவும் திரு அனுராக் தாக்கூர் கூறினார்.

<<<<>>>>

மகாராஷ்ட்ராவில் இரண்டு அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் உயிரிழந்தது தொடர்பாக விளக்கம்கோரி தேசிய மனித உரிமைகள் ஆணையம், மாநில அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

நான்கு வாரத்திற்குள் விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு அதில் கோரப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களும் இதில் இடம்பெற வேண்டும் என்றும் அந்த நோட்டீஸில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

இயற்கை சீற்றத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சிக்கிம் மாநிலத்தில் சேதங்களை மதிப்பீடு செய்ய மத்திய குழு விரைவில் அம்மாநிலத்திற்கு செல்ல உள்ளது.

இதற்காக பல்வேறு அமைச்சகங்களின் உயரதிகாரிகளைக் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

அம்மாநிலத்தில் ஏற்பட்டுள்ள சேத விவரங்களை இந்தக் குழு மதிப்பீடு செய்து அளிக்கும் அறிக்கையைப் பொறுத்து கூடுதல் நிவாரணத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கும் என்று உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே அம்மாநிலத்திற்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து 45 கோடி ரூபாயை ஒதுக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

வெள்ளத்தால் சூழப்பட்ட பகுதியில் இருந்து பொதுமக்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்துதரப்பட்டு வருகின்றன.

மீட்புப் பணியில் ஈடுபட தேசிய பேரிடர் மீட்புப் படையின் கூடுதல் அணிகள் சிக்கிம் மாநிலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விமானப் படையினரும், ராணுவத்தினரும் மாநில அரசுக்கு உதவி செய்து வருகின்றனர்.

<<<<>>>>

மத்திய அரசின் இலவச சமையல் எரிவாயு இணைப்புத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சிலிண்டருக்கான மானியத்தொகையை மத்திய அரசு உயர்த்தியிருப்பது பொதுமக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

இது தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தமிழகத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

யுக்ரைனில் ரஷ்யா மேற்கொண்டுள்ள சிறப்பு ராணுவ நடவடிக்கையை நிறுத்த முயற்சிப்பதாக அந்நாட்டின் அதிபர் திரு. விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

இந்தப் போரினை ரஷ்யா தொடங்கவில்லை என்பதில் உறுதியாக இருப்பதாக கூறிய திரு. புடின், உலகில் மிகப்பெரிய நிலப்பகுதியைக் கொண்டுள்ள நாடு ரஷ்யா என்றும், யுக்ரைனை ஆக்கிரமித்து நிலத்தை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை என்றும் கூறினார்.

எனவே இரு நாடுகளுக்கும் தற்போது ஏற்பட்டுள்ள மோதல் நில ஆக்கிரமிப்பு தொடர்பானது அல்லது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக அல்ல என்றும், உலகை ஒழுங்குபடுத்த நடைபெறும் போர் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறிய மாநிலமாக மாறுவதற்கு மாநில அரசு பாடுபட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் நேற்று திராவிட கழகத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழ்நாடு இழந்த உரிமைகளை மீட்பதில் உறுதியாக உள்ளதாக கூறினார்.

குடும்பக் கட்டுப்பாடு உட்பட பல்வேறு விஷயங்களில் தமிழகம் தேசிய அளவில் சாதனை படைத்த நிலையில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்கக் கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தேசிய அளவில் எதிர்க்கட்சிகள் அமைத்துள்ள **I N D I A** கூட்டணி அரசியல் கூட்டணி அல்ல என்றும், கொள்கை கூட்டணி என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவுக்கு இன்று மேலும் ஒரு தங்கப்பதக்கம் கிடைத்தது.

சீனாவில் ஹாங்சு நகரில் இன்று காலை நடைபெற்ற வில்வித்தை மகளிர் ஒற்றையர் பிரிவி இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ஜோதி சுரேகா தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இன்று ருதுராஜ் கெய்க்வாட் தலைமையிலான இந்திய அணி ஆஃப்கனிஸ்தானை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இன்று காலை 11.30 மணிக்கு தொடங்குகிறது.

இதன்மூலம் வெள்ளிப் பதக்கம் உறுதிசெய்யப்பட்டுள்ளது என்றபோதிலும் இறுதிப்போட்டியில் இந்தியா, ஆஃப்கானிஸ்தானை எளிதாக வென்று தங்கப்பதக்கம் வெல்ல வாய்ப்புள்ளதாக விளையாட்டு நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் பிரிவின் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ள இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை இன்று தென்கொரியாவின் **Choi Sol – Kim Won** இணையை எதிர்கொள்கிறது.

வில்வித்தை ஆடவர் தனிநபர் தங்கப்பதக்கத்திற்கான போட்டியில் அபிஷேக் வர்மா பங்கேற்கிறார்.

ஆடவர் குழு செஸ் இறுதிச் சுற்றில் இந்தியாவின் விதித் குஜராத்தி, அர்ஜுன், பிரக்யானந்தா ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

மகளிர் குழு இறுதிச் சுற்றில் கோனேரு ஹம்பி, வைஷாலி, சவிதா ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

ஆடவர் கபடி இறுதிப் போட்டியில் இந்தியா - ஈரானையும், மகளிர் கபடி இறுதிப்போட்டியில் இந்தியா – தைவானையும் எதிர்கொள்கிறது.

வாலிபால், மல்யுத்தம், ரோலர் ஸ்கேட்டிங் போட்டிகளிலும் இந்திய அணியினர் இன்று பங்கேற்க உள்ளதால் பதக்க எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 96ஆக அதிகரித்துள்ளது.

சீனாவின் ஹாங்சு நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இதுவரை இந்தியா 23 தங்கம், 34 வெள்ளி, 39 வெண்கலம் உட்பட மொத்தம் 96 பதக்க’களை வென்று பதக்கப்பட்டியலில் 4வது இடத்தில் தொடர்ந்து நீடிக்கிறது.

நாளையுடன் ஆசிய விளையாட்டுப் போட்டி நிறைவடைய உள்ள நிலையில் கிரிக்கெட், கபடி, வில்வித்தை, பேட்மிட்டன் போட்டிகளில் இந்தியாவுக்கு பதக்க’கள் உறுதியாகி உள்ளதால் ஒட்டுமொத்த பதக்க எண்ணிக்கை 100 என்ற எண்ணிக்கையை கடக்க வாய்ப்புள்ளது.

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்தாவில் 2018ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டி நடைபெற்றபோது இந்தியா 70 பதக்க’களை வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

72 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா ஆசிய விளையாட்டுப் போட்டியில் அதிக தங்கப் பதக்கங்களை அதாவது 21 பதக்கங்களை தற்போது வரை வென்றுள்ளது.

இதற்கு முன்பு 1951ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற முதல் ஆசிய விளையாட்டுப் போட்டியில் 15 தங்கப்பதக்கங்களை வென்றதே இந்தியாவின் அதிகபட்ச தங்கப்பதக்க எண்ணிக்கையாக இருந்தது.

<<<<>>>>

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் 81 ரன் வித்தியாசத்தில் நெதர்லாந்தை வென்றது.

இப்போட்டியில் முதலில் விளையாடிய பாகிஸ்தான் 49 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 286 ரன் எடுத்தது.

287 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய நெதர்லாந்து, 41 ஓவரில் 205 ரன்னுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஆஃப்கனிஸ்தான் - பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

பிற்பகல் 2 மணிக்கு தில்லியில் நடைபெற உள்ள மற்றொரு ஆட்டத்தில் தென்னாப்பிரிக்கா - இலங்கையை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**